# முதலாம் தவணைப்பரீட்சை- 2014

## நல்லூர் - யாழ்ப்பாணம்

தரம் - 7 | செயன்முறைத் தொழில்நுட்பம் | நேரம்- 1.30 நிமிடங்கள்

பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. இலங்கையில் பிரபல்யம் அடைந்துள்ள விவசாய நடவடிக்கை யாது?
1. அலங்கார மீன் வளர்ப்பு 2. ஆடை உற்பத்தி
3. கால்நடை வளர்ப்பு 4. பயிர்ச்செய்கை

02. இயற்கைப் பசளைகளில் ஒன்று
1. யூரியா 2. அமோனியா 3. கூட்டெரு 4. பொஸ்பேற்று

03. சாடித்தாவரமொன்றின் இலைகள் மஞ்சள் நிறமாகிக் காணப்பட்டது. இதற்கு இடக்கூடிய பசளை
1. யூரியா 2. பொட்டாசியம்
3. பொட்டாசியம் மியூரியேற் 4. பொட்டாசியம் சல்பேற்று

04. கொத்துமுனை நோய் உண்டாகும் தாவரம்
1. தென்னை 2. மா 3. பலா 4. வாழை

05. உடலுக்கு சக்தியை வழங்கும் உணவு வகை
1. காபோவைதரேற்று, கொழுப்பு 2. காபோவைதரேற்று, விற்றமின்
3. புரதம், கனியுப்பு 4. புரதம், கொழுப்பு

06. நிழலான இடங்களில் வளரக்கூடிய தாவரம்
1. பொலிபியா 2. சீனியாஸ் 3. அந்தூரியம் 4. கோலியாஸ்



07. இலைக்கறி வகையில் காணப்படும் கனிப்பொருள் யாது?
1. கல்சியம், இரும்பு 2. உயிர்ச்சத்து B,C 3. புரதம் 4. காபோவைதரேற்று

08. புதிய மீனின் இயல்புகளில் ஒன்று அல்லாதது
1. கண்கள் பிரகாசமாக காணப்படல் 2. செதில் இலகுவில் தழராது
3. தசையில் உறுதி காணப்படல் 4. பூக்கள் கருஞ்சிவப்பு நிறமாகக் காணப்படல்





09. இரண்டாம் வகை நெம்புகோலுக்கு உதாரணம்
1. பாக்குவெட்டி 2. சாவணம்
3. கத்தரிக்கோல் 4. ஒற்றைச் சில்லு தள்ளு வண்டி

10. படம் பிறேம் பண்ணல், யன்னல்களைப் பொருத்துதல், கண்ணாடி வேலைகள் போன்றவற்றிற்குப் பயன்படுத்தப்படும் ஆணி
1. மென்றகட்டாணி 2. கம்பியாணி 3. திருகாணி 4. கொக்கியாணி

11. கேத்திர கணித திண்ம உருக்களில் அல்லாதது.

1. 
2. 
3. 
4. 

12. சாதாரண கடித உறையின் விரியல் பின்வருவனவற்றில் எது?

1. 
2. 
3. 
4. 



kalvi.lk

13. பொருட்களில் காணப்படும் பண்பு அல்லாதது?
1. தொட்டுணரக் கூடியது    2. வடிவமைப்புடையது
3. கண்ணால் பார்க்கக் கூடியது    4. சேமித்து வைக்க முடியாதது

14. குட்டியீனும் மீனினம் எது?
1. கப்பி பிளேட்    2. கோல்ட்பில் ஏன்ஜல்    3. சீப்ரா பாபல்சிப்    4. குராபி ரேற்

15. முடிவுப் பொருள் ஒன்றினை உருவாக்குவதற்கு முன்னர் செய்யப்பட வேண்டியது
1. அப்பொருளின் வரை படத்தை வரைதல்
2. தேவையான மூலப்பொருட்களை இனங்காணல்
3. திட்டத்தைத் தயாரித்தல்
4. தேவையான கருவி உபகரணங்களைப் பட்டியற்படுத்தல்

16. பயிர்களுக்குச் சேதங்களை ஏற்படுத்தும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த பயன்படுத்தக் கூடியது
1. யூரியாக் கரைசல்    2. சாணக்கரைசல்
3. வேப்பிலைக் கரைசல்    4. பொஸ்பேற்று கரைசல்

17. லோம் மண் எனப்படுவது
1. மணல் மண்    2. களி மண்    3. இருவாட்டி மண்    4. அடையல் மண்

18. மீன் தொட்டியில் மீன்களுக்கு ஏற்படும் நோய்கள் அல்லாதது
1. பங்கசு    2. பற்றீரியா    3. ஒட்டுண்ணிகள்    4. நிக்கெட்ஸ்

19. தண்டுத்துண்டங்கள் மூலம் இனப்பெருக்கம் செய்யக்கூடிய அலங்காரத் தாவரம்
1. தாழை    2. பன்னங்கள்    3. பெபரோமியா    4. டைபன்பர்சியா

20. வெய்யிலில் உலர்த்தி நீண்டகாலம் பேணக்கூடிய உணவுப் பொருள்
1. பாவற்காய்    2. தக்காளிப்பழம்    3. புடலங்காய்    4. பூசணிக்காய்

(20x1=20 புள்ளிகள்)

## பகுதி II

முதலாம் வினா கட்டாயமாகவும் ஏனையவற்றில் இரண்டு வினாவும் எல்லாமாக மூன்று வினாக்களிற்கு விடை தருக.

01.
1. நீர் செய்த செயற்பாடு ஒன்றினைக் குறிப்பிடுக.
2. அச்செயற்பாட்டிற்குப் பயன்படுத்திய பொருட்கள், உபகரணங்களை அட்டவணைப்படுத்துக.
3. மேற்படி செயற்பாட்டை படிமுறையாகத் தருக. (10 புள்ளிகள்)

02.
1. பயிலிருந்து சிறப்பான அறுவடையைப் பெறவேண்டுமாயின் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?
2. உணவு தயாரிப்பதற்காக தன்னை ஆயத்தம் செய்யும் முறைகள் 4 தருக.
3. உணவில் பயன்படுத்தப்படும் இலைக்கறி வகைகள் 4 தருக. (10 புள்ளிகள்)

04.
1. தேவைகளுக்கும், விருப்பங்களுக்குமான வேறுபாட்டினைத் தருக.
2.

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| கோதுமை மா | 250g | 25.00 |
| முட்டை | 5 | 75.00 |
| சீனி | 250g | 25.00 |
| மாஜரீன் | 250g | 80.00 |
| ஏனைய செலவு | | 150.00 |

மேற்குறிப்பிட்ட 1kg பட்டர் கேக் செலவு விபரம் தரப்பட்டுள்ளது. முப்பது துண்டுகள் வெட்டக்கூடியதாக உள்ளது.
A. முழு மொத்தச் செலவு யாது?
B. ஒரு கேக் துண்டின் விலை யாது?

(10 புள்ளிகள்)



kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page